DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of Judicial Magistrate Court, Sankarankovil )

| | | |
|---|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 139/2020** |
| Deposition of Witness for | : PW 7 |
| Name | : திரு.கோமதி நாதன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 24.08.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 24 August 2026**.**

A1 died. A2,A3 எதிரிகள் ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

முதல்விசாரணை:

நான் தற்போது தமிழ்நாடு காவல்துறையில் காவல்நிலையத்தில் பணிபுநிந்து ஓய்பு பெற்றுள்ளேன். இதற்கு முன்பு சின்னக்கோவிலான்குளம் காவல் நிலையத்தில் உதவி ஆயவாளராக பணிபுரிந்த போது நிலைய குற்ற எண்.118/2017 இ.த.ச.பிரிவு. 341, 294(பி), 324, 506(ii)–ன்படி வழக்கை விசாரணைக்கு எடுத்துகொண்டு 28.09.2017–ம் தேதி இரவு 20.30 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் லதா மற்றும் முத்தையாகோனார் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து **மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.5 ஆகவும், மாதிரி**

**வரைபடம் அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து 161(3) வாக்குமூலம் பதிவுசெய்தேன். சாட்சிகள், ஆணைமுத்து, திருமலையாட்சி, சங்கரமூர்த்தி, தெத்திமாடசாமி, கள்ளவாண்டான், மேலும் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. மாரியப்பன் அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 02.10.2017–ம் கோ. மருதப்பபுரம் காளியம்மன் கோவில் அருகில் இவ்வழக்கின் முதல் எதிரி வேல்சாமி என்பவரை 11.00 மணிக்கு கைது செய்து நிலையம் 12.00 மணிக்கு உச்சநீதிமன்ற கட்டளையின் படி கொண்டுவந்து தக்கவழிக்காவல் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். பின்பு நான் பயிற்சிக்கு சென்றதால் மேற்படி விசாரணையை உதவி ஆய்வாளர் திரு. கற்பகராஜ் என்பவரின் பார்வைக்கு வழக்கு கோப்பினை வைத்தேன். இது சம்மந்தமாக உதவி ஆய்வாளர் கற்பகராஜா என்னை விசாரணை செய்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

இந்த வழக்கை பொருத்தவரை நான் பகுதியளவு புலன் விசாரணை அதிகாரி என்றால் சரிதான். இந்த வழக்கின் குற்றப்பத்திரிக்கை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய இடத்தில் அ.சா.1 மாடு மேய்த்துகொண்டிருந்ததாக எனது விசாரணையில் துலங்குமா என்றால் துலங்காது. அ.சா. 1 மருத்துவமனைக்கு செல்வதற்கு முன்பாகவே காவல்நிலையம் வந்ததாக எனது விசாரணையில் துலங்குமா என்றால் துலங்காது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் அ.சா.2 இருந்ததாக துலங்குமா என்றால் துலங்காது. வழக்கின் எதிரிகள் அ.சா.2–ன் இடத்தில் JCB, டிராக்டர் வைத்துமண் எடுத்ததாக துலங்குமா என்றால் துலங்காது. அ.சா.2 மண் எடுத்ததால் எதிரிகளை தட்டி கேட்டதற்காவ சம்பவம் நடைபெற்றது என்று எனது விசாரணையில் துலங்குமா என்றால் துலங்காது. அ.சா.1–யிடம் காவல்நிலையத்தில் வைத்து புகார் வாக்குமூலம் பெற்றதாக எனது விசாரணையில் துலங்குமா என்றால் துலங்காது. அ.சா.2 எனது விசாரணையில் கேள்விபட்ட சாட்சியாகத்தான் உள்ளது என்றால் சரிதான். எனது பார்வை

மகஜரின் படி சம்பவம் அ.சா.2 திருமலையாச்சி என்பவரின் இடத்தில் நடந்ததாக துலங்காது என்றால் சரிதான். எனது மாதிரி வரைபடத்தில் அ.சா.2 திருமலையாச்சி என்பவரின் இடம் இருப்பதாக துலங்காது என்றால் சரிதான். மாதிரி வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள யாரையும் சாட்சிகளாக விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொல்லக்கூடிய நாள், நேரத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அதிகாரியையும், பின்னர் சம்பவம் இடம் சென்று சாட்சிகளை விசாரணை செய்ததாக சொல்வதுவும், சாட்சிகள் முன்பு பார்வை மகசுர் மற்றும் மாதிரி வரைபடம் தாயர் செய்யதாக சொல்வதுவும், இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. எனது விசாரணை ஒருதலைபட்சமானது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

M MARI
Digitally signed by M MARI
Date: 2026.08.24 19:10:51 +0530